**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண். 44** **நாள்: 30.03.2026**

**சென்னை மாவட்டத்தில் பறக்கும் படைகள் மற்றும் நிலையான கண்காணிப்புக் குழுக்கள் மூலம் உரிய ஆவணங்கள் இன்றி பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் ரொக்கத்தை விடுவிக்கக் கோரி 62 மேல்முறையீடுகள் பெறப்பட்டு, இதுவரை உரிய ஆணவங்கள் சமர்ப்பித்த 45 மேல்முறையீடுகளில் ரூ.80,30,713/- விடுவிக்கப்பட்டுள்ளது.**

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல் – 2026னை முன்னிட்டு, இந்திய தேர்தல் ஆணையத்தின் செயல்பாட்டு செயல்முறை (Standard Operating Procedure) மற்றும் தேர்தல் நடத்தை விதிமுறைகளின்படி, முறையான ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்படும் ரூ.10,000/-த்திற்கு மேல் மதிப்புள்ள பொருட்கள் மற்றும் ரூ.50,000/- மேல் ரொக்கமாக கொண்டு செல்லப்படும் பணம் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டு அரசு கருவூலத்தில் ஒப்படைக்கப்படுகிறது. பின்பு விசாரணையில் முறையான ஆவணங்களை மேல்முறையீட்டு குழுவிடம் (Appellate authority) தாக்கல் செய்யும் பட்சத்தில் மீண்டும் உரிய நபரிடம் ஒப்படைக்கப்படுகிறது.

ஆவணங்கள் இன்றி பறிமுதல் செய்யப்படும் பொருட்கள் மற்றும் ரொக்கம் விடுவிப்பது தொடர்பாக கீழ்காணும் மேல்முறையீட்டு அலுவலர்கள் அடங்கிய குழு (Appellate Authority) அமைக்கப்பட்டுள்ளது.

<u>மேல்முறையீட்டுக் குழு அடங்கிய அலுவலர்கள் மற்றும் தொலைபேசி எண்கள்</u>

1. மாவட்ட வருவாய் அலுவலர்/ உதவி ஆணையர் (பொது நிர்வாகம் மற்றும் பணிகள்) பெருநகர சென்னை மாநகராட்சி. (94451 90300)
2. இணை செயலாளர்/ நிதி ஆலோசகர், பெருநகர சென்னை மாநகராட்சி. (94451 90741)
3. தலைமை கணக்கு அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி (94450 26007)

பறிமுதல் செய்யப்படும் பொருட்கள் மற்றும் ரொக்கம் ஆகியவற்றை விடுவிக்க மேல்முறையீடு செய்பவர்கள் மனுவினை உரிய ஆவணங்களுடன் சமர்ப்பிக்க வேண்டும். மேல்முறையீட்டுக்குழு விசாரணை மேற்கொண்டு ஆவணங்கள் முறையாக இருப்பின் விடுவிப்பு ஆணை வழங்கும் அரசு கருவூலத்தில் வைக்கப்பட்டுள்ள பொருட்கள் அல்லது ரொக்கத்தினை பறக்கும் படை அலுவலர் மூலமாக விடுவிப்பு ஆணையினை கருவூலத்தில் சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளலாம்.

சென்னை மாவட்டத்தில் பறக்கும் படைகள் மற்றும் நிலையான கண்காணிப்புக் குழுக்கள் மூலம் உரிய ஆவணங்களின்றி பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் ரொக்கத்தை விடுவிக்கக் கோரி இதுவரை 62 மேல்முறையீடுகள் பெறப்பட்டு, 28.03.2026 வரை உரிய ஆணவங்கள் சமர்ப்பித்த 45 மேல்முறையீடுகளில் ரூ.80,30,713/- (ரூ.85,473/- மதிப்புள்ள எவர்சில்வர் பாத்திரங்கள் உள்பட) விடுவிக்கப்பட்டுள்ளது. 17 மேல்முறையீட்டு மனுக்கள் பரிசீலனையில் உள்ளன.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**